# Tamil Language Eligibility Test

**Sr. No.** **Question Body and Alternatives**

1 “ஔடதமாம் அனுபவம்” இப்பாடலடியில் இடம் பெற்றுள்ள ‘ஔடதம்’ என்னும் சொல்லின் பொருள்

A) நோய்

B) மருத்துவம்

C) மருந்து

D) மருத்துவர்

2 “நுண்துளி தூங்கும் குற்றாலம்” என்று பாடியவர்

A) மாணிக்கவாசகர்

B) திருநாவுக்கரசர்

C) திருஞானசம்பந்தர்

D) சுந்தரர்

3 “ஒரு தேர்வு தந்த விளைவன்று கல்வி;
அது வளர்ச்சி வாயில்” – என்று பாடியவர்

A) வாணிதாசன்

B) மு.மேத்தா

C) மீரா

D) குலோத்துங்கன்

4 யாப்பின் உறுப்புகள்

A) மூன்று

B) ஆறு

C) ஒன்பது

D) பன்னிரண்டு

5 “முதன்முதலில் தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை” என்ற கருத்தை முன்வைத்தவர்

A) வில்லியம் ஜோன்ஸ்

B) பிரான்சிஸ் எல்லீஸ்

C) கால்டுவெல்

D) மாக்ஸ்முல்லர்

6 “மா பாரதம் தமிழ்ப்படுத்தும்
மதுராபுரிச் சங்கம் வைத்தும்” – என்று சங்க காலத்திலேயே மொழிபெயர்ப்பு
மேற்கொள்ளப்பட்டதைக் குறிப்பிடும் செப்பேடு

A) உத்திரமேரூர் செப்பேடு

B) மதுரை செப்பேடு

C) சின்னமனூர்ச் செப்பேடு

D) திருவாலங்காட்டுச் செப்பேடு

7 ஆண்பாற் பிள்ளைத்தமிழில் பொருந்தாத பருவம்

A) சிற்றில்

B) ஊசல்

C) சிறுபறை

D) சிறுதேர்

8 கூற்று 1 : “ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது
மொழிபெயர்ப்பு” என்கிறார் மணவை முஸ்தபா.
கூற்று 2 : “உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு
காரணமாகும்” என்கிறார் கி.வா.ஜகந்நாதன்.

A) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி

B) கூற்று 1 மற்றும் கூற்று 2 தவறு

C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

9 ஈரோடு தமிழன்பன் இயற்றாத நூலைத் தேர்வு செய்க

A) தமிழோவியம்

B) வணக்கம் வள்ளுவ

C) பாண்டியன் பரிசு

D) நெஞ்சின் நிழல்

10 மரபுப் பிழைகளற்ற தொடரைத் தேர்க

A) நேற்று தென்றல் காற்று அடித்தது

B) தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்

C) கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்

D) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்

11 ‘ஆசாரக் கோவை’ என்னும் நூலில் இடம் பெற்றுள்ள வெண்பாக்களின் எண்ணிக்கை

A) பத்து

B) நூறு

C) ஆயிரம்

D) ஐம்பது

12 “என்று பிறந்தவள் என்று உணராத
இயல்பினளாம் எங்கள் தாய் !” – என்று பாடியவர்

A) பாரதியார்

B) பாரதிதாசன்

C) சுரதா

D) கண்ணதாசன்

13 ‘நே’ என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்கு உரிய பொருள்

A) மேகம்

B) அன்பு

C) ஒழுக்கம்

D) இளமை

14 தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடப்படும் பாடல்கள்

A) திருவெம்பாவை, திருவருட்பா

B) திருப்பாவை, திருப்புகழ்

C) திருப்புகழ், திருக்குறள்

D) திருவெம்பாவை, திருப்பாவை

15 ‘வெற்பு’ என்னும் சொல்லின் பொருள்

A) மலை

B) மழை

C) வெறுப்பு

D) முகில்

16 கரிசல் வட்டாரச் சொல்லகராதியை உருவாக்கியவர்

A) பாவாணர்

B) கி.ராஜநாராயணன்

C) வீரமாமுனிவர்

D) இளங்குமரனார்

17 ‘கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து’ – என்ற குறளில் பயின்றுவரும் அணி

A) உவமை அணி

B) எடுத்துக்காட்டு உவமை அணி

C) பிறிது மொழிதல் அணி

D) வேற்றுமை அணி

18 பிழையற்ற தொடரைக் கண்டறிக

A) கூரை போட்டனர்

B) கூரை வேய்ந்தனர்

C) கூரை முடைந்தனர்

D) கூரை பரப்பினர்

19 சொல்லின் இறுதியில் வரும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை

A) 11

B) 18

C) 12

D) 10

20 ‘விழலுக்கு இறைத்த நீர் போல’ – இப்பழமொழியின் பொருள்

A) எதிர்பாரா நிகழ்வு

B) தற்செயல் நிகழ்வு

C) பயனற்ற செயல்

D) ஒற்றுமையின்மை

21 ‘வந்தனன்’ – இச்சொல்லுக்குரிய பகுதியைத் தேர்க

A) வந்து

B) வ

C) வந்த

D) வா

22 பண்புத்தொகை அல்லாத சொல்லைத் தேர்க

A) கருமுகில்

B) பைங்கிளி

C) அதிர்குரல்

D) செந்தமிழ்

23 பெருஞ்சித்திரனார் பாடலில் நிலைத்த நூலாகக் குறிப்பிடப்படும் நூல்

A) திருக்குறள்

B) மணிமேகலை

C) சிலப்பதிகாரம்

D) பெரியபுராணம்

24 காலம் கரந்த பெயரெச்சம் என அழைக்கப்படுவது

A) வினைத்தொகை

B) உம்மைத்தொகை

C) பண்புத்தொகை

D) வினையாலணையும் பெயர்

25

நான் நேற்று மகாகவி பாரதியாரின் பிறந்தநாளையொட்டி நடந்த கவியரங்கிற்குச் சென்றேன். அங்குப் பல தமிழ் அறிஞர்களும் வந்திருந்தார்கள் – அடிக்கோடிட்ட சொற்களின் இடங்களை முறையே தேர்வு செய்க

A) படர்க்கை வினை, தன்மைப்பெயர்

B) முன்னிலைப் பெயர், தன்மை வினை

C) தன்மைப் பெயர், படர்க்கை வினை

D) முன்னிலை வினை, படர்க்கைப் பெயர்

26 குளிர்காலத்திற்குரிய மாதங்கள்

A) ஆவணி, புரட்டாசி

B) ஐப்பசி, கார்த்திகை

C) மார்கழி, தை

D) மாசி, பங்குனி

27 “ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம்” இப்பாடலில் உள்ள ‘ஆழிப்பெருக்கு’ என்ற சொல்லுக்குரிய பொருள்

A) வான்கோள்

B) பூமிகோள்

C) கடல்கோள்

D) புதன்கோள்

28 ‘ஏழைகளின் ஊட்டி’ என்று அழைக்கப்படும் ஊர்

A) கொடைக்கானல்

B) நீலகிரி

C) ஏற்காடு

D) கொல்லிமலை

29 திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்தித் தொடங்கும் நூல்

A) மணிமேகலை

B) சீவகசிந்தாமணி

C) சிலப்பதிகாரம்

D) கம்பராமாயணம்

30 கருந்துளைப் பற்றிய முந்தைய கருத்துகளைத் தலைகீழாகப் புரட்டிப்போட்ட ஆராய்ச்சியின் பெயர்

A) அணுக் கொள்கை

B) நியூட்டன் விதி

C) ஹாக்கிங் கதிர்வீச்சு

D) ஆர்க்கிமிடிஸ் கோட்பாடு

31

தாவரங்களை அதன் குலை வகைகளுடன் பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | கொத்து | 1. | வாழைக் குலை |
| (b) | குலை | 2. | அவரை |
| (c) | கதிர் | 3. | கொடி முந்திரி |
| (d) | தாறு | 4. | சோளம் |

A) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

D) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

32

பொருத்தி விடை தேர்க

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (a) | மாரி | 1. | வயிறு |
| (b) | கும்பி | 2. | பூமி |
| (c) | பூதலம் | 3. | உலகம் |
| (d) | பார் | 4. | மழை |

A) (a) 4 (b) 1 (c) 3 (d) 2

B) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

33

செய்யுள் அடிகளில் இடம்பெறும் எண்ணுப்பெயர்களைப் பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | நாற்றிசையும் செல்லாத நாடில்லை | 1. | ஐந்து |
| (b) | ஐந்துசால்பு ஊன்றிய தூண் | 2. | நான்கு |
| (c) | நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | 3. | ஆயிரம் |
| (d) | ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | 4. | நான்கு & இரண்டு |

A) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

B) (a) 1 (b) 2 (c) 3 (d) 4

C) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

34

பழமொழிகளைப் பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆறில்லா ஊருக்கு | 1. | கூத்தாடும் |
| (b) | குறை குடம் | 2. | நூறு வயது |
| (c) | நொறுங்கத் தின்றால் | 3. | அடி சறுக்கும் |
| (d) | யானைக்கும் | 4. | அழகு பாழ் |

A) (a) 3 (b) 1 (c) 2 (d) 4

B) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

C) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

D) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

35

குறளுக்குரிய அதிகாரத்தினைத் தேர்வு செய்க

| | குறள் | | அதிகாரம் |
|---|---|---|---|
| (a) | மனத்துக்கண் மாசிலன்... | 1. | அன்புடைமை |
| (b) | பகுத்துண்டு பல்லுயிர்... | 2. | அறன் வலியுறுத்தல் |
| (c) | அன்பின் வழியது... | 3. | இனியவை கூறல் |
| (d) | பணிவுடையன் இன்சொலன்... | 4. | கொல்லாமை |

A) (a) 1 (b) 3 (c) 4 (d) 2

B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

C) (a) 4 (b) 2 (c) 1 (d) 3

D) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

36

வினாச்சொல்லுடன் சரியாகப் பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | பள்ளிக்கூடம் | 1. | யார்? |
| (b) | பாண்டவர்கள் | 2. | எங்குள்ளது? |
| (c) | கடைக்குச் சென்றது | 3. | ஏன்? |
| (d) | பயிர்கள் வாடுவது | 4. | எத்தனைப் பேர்? |

A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

B) (a) 1 (b) 3 (c) 4 (d) 2

C) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

D) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

37

பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | பொருட்பெயர் | 1. | மாலை, இரவு |
| (b) | இடப்பெயர் | 2. | முகம், கை |
| (c) | காலப்பெயர் | 3. | நாற்காலி, புத்தகம் |
| (d) | சினைப்பெயர் | 4. | வேலூர், நாமக்கல் |

A) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

C) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

D) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

38

பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் | 1. | சோறு |
| (b) | கல் சிலை ஆகும் எனில், நெல் ஆவது | 2. | பூவில் |
| (c) | குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து வருவது | 3. | கற்றல் |
| (d) | மீன் இருப்பது நீரில்; தேன் இருப்பது | 4. | எழுத்து |

A) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

B) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

C) (a) 1 (b) 3 (c) 2 (d) 4

D) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

39

பொருத்தி விடை தேர்க

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (a) | மழலை | 1. | உடல் |
| (b) | வனப்பு | 2. | குழந்தை |
| (c) | நெடி | 3. | நாற்றம் |
| (d) | மேனி | 4. | அழகு |

A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

B) (a) 2 (b) 4 (c) 3 (d) 1

C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

D) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

40

பொருத்தி விடை தேர்க

| | கவிஞர் | | இயற்பெயர் |
|---|---|---|---|
| (a) | பெருஞ்சித்திரனார் | 1. | இராஜலெட்சுமி |
| (b) | இறையரசன் | 2. | துரை மாணிக்கம் |
| (c) | தமிழழகனார் | 3. | சே.சேசுராசா |
| (d) | கோமகள் | 4. | சண்முகசுந்தரம் |

A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

B) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

D) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

41

கல்யாண்ஜியின் படைப்புகளைப் பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | அந்நியமற்ற நதி | 1. | சிறுகதைத் தொகுப்பு |
| (b) | அகமும் புறமும் | 2. | கட்டுரைத் தொகுப்பு |
| (c) | சில இறகுகள் சில பறவைகள் | 3. | கவிதை நூல் |
| (d) | உயரப் பறத்தல் | 4. | கடிதங்களின் தொகுப்பு |

A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

B) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

D) (a) 1 (b) 4 (c) 2 (d) 3

42

பொருத்தி விடை தேர்க

(a) நீகான் — 1. அடிமரம்
(b) சுக்கான் — 2. ஆணிகள்
(c) தொகுதி — 3. கப்பல் செலுத்துபவர்
(d) எரா — 4. திசை திருப்பும் கருவி

A) (a) 1 (b) 3 (c) 4 (d) 2

B) (a) 4 (b) 1 (c) 3 (d) 2

C) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

43

பொருத்தி விடை தேர்க

(a) சூம்பல் — 1. புழு பூச்சி அரித்த காய்
(b) சொத்தை — 2. சூட்டினால் பழுத்த பிஞ்சு
(c) வெம்பல் — 3. குளுகுளுத்த பழம்
(d) அளியல் — 4. நுனியில் சுருங்கிய காய்

A) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

B) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

44

பொருத்தி விடை தேர்க

(a) Telegraph — 1. தொலைபேசி
(b) Telemetry — 2. தொலைநோக்கி
(c) Telescope — 3. தொலைவரி
(d) Telephone — 4. தொலை அளவியல்

A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

B) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

D) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

45

பொருத்தி விடை தேர்க

(a) வையம் — 1. அகல் விளக்கு
(b) சொல் மாலை — 2. அறிவு
(c) ஞானம் — 3. பாமாலை
(d) தகளி — 4. உலகம்

A) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

B) (a) 1 (b) 3 (c) 4 (d) 2

C) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

D) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

46

பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | பாவேந்தர் | 1. | கன்பூசியஸ் |
| (b) | புதுக்கவிதையின் தந்தை | 2. | பாரதிதாசன் |
| (c) | சீன மெய்யியலாளர் | 3. | தந்தை பெரியார் |
| (d) | தெற்காசியாவின் சாக்ரடீசு | 4. | ந. பிச்சமூர்த்தி |

A) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

B) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

C) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

D) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

47

பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | சரசுவதி மகால் நூலகம் | 1. | சென்னை |
| (b) | கன்னிமாரா நூலகம் | 2. | திருவனந்தபுரம் |
| (c) | நடுவண் நூலகம் | 3. | கொல்கத்தா |
| (d) | தேசிய நூலகம் | 4. | தஞ்சாவூர் |

A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

B) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

48

பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆண்பால் | 1. | பசுக்கள், மலைகள் |
| (b) | பெண்பால் | 2. | யானை, புறா |
| (c) | ஒன்றன்பால் | 3. | அரசி, தலைவி |
| (d) | பலவின்பால் | 4. | வீரன், மருதன் |

A) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

B) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

D) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

49

ஊர்ப்பெயர்களுடன் சிறப்புப் பெயர்களைப் பொருத்தித் தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | தூத்துக்குடி | 1. | தூங்கா நகரம் |
| (b) | சிவகாசி | 2. | தீப நகரம் |
| (c) | மதுரை | 3. | முத்து நகரம் |
| (d) | திருவண்ணாமலை | 4. | குட்டி ஜப்பான் |

A) (a) 2 (b) 4 (c) 3 (d) 1

B) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

C) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

D) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

50

பொருத்தி விடை தேர்க

| | | | |
|---|---|---|---|
| (a) | தொகைச்சொல் | 1. | மேடும்பள்ளமும் |
| (b) | மரபு இணைச்சொல் | 2. | முக்கனி |
| (c) | கலைச்சொல் | 3. | தென்னாடு |
| (d) | திசைச்சொல் | 4. | கல்வெட்டியல் |

A) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

B) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

C) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

D) (a) 4 (b) 3 (c) 1 (d) 2